**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.102/2017**

**நாள் - 11.03.2024.**

**பெயர். திரு. நாராயணன் த/பெ. சேகர்**

**வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** 6ஆம் வாதி என் பாட்டி உறவு ஆகும். 4ஆம் பிரதிவாதி என் பெரியம்மா ஆகும். 5,6 பிரதிவாதிகள் என் மூத்த சகோதரிகள் ஆகும். 7ஆம் பிரதிவாதி என் பெரியப்பா. 8ஆம் பிரதிவாதி என் அத்தை ஆகும். 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் எந்தவித விரோதமும் இல்லை என்றால் சரி தான்.

**2.** வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.78/2 விஸ்தீரணம் 2 ஏக்கர் 5 செண்ட் ஆகும். வழக்கு சொத்திற்கு எந்த பக்கம் 2ம் பிரதிவாதியின் நிலம் இருக்கிறது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. கிழக்கு பக்கமும் 2ம் பிரதிவாதியின் நிலம் இருக்கிறதா என்றால் இருக்கிறது.

**3.** எனக்கு தெரிந்து 2ம் பிரதிவாதி மேற்படி வடக்கு பக்கமும், கிழக்கு பக்கமும் உள்ள அவரது நிலத்தை எத்தனை வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் 2ம் பிரதிவாதி சொத்தை அனுபவிப்பதை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன்.

**4.** வழக்கு சொத்து விவரத்தில் ஜக்பந்தியில் வடக்கு பக்கமும், கிழக்கு பக்கமும் 2ம் பிரதிவாதியின் நிலம் இருப்பதாக காண்பித்துள்ளேனா என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை 3ம் பத்தியில், வழக்கு சொத்தை தவிர வேறு பூர்வீக சொத்துக்களும் இருப்பதாக குறிப்பிட்டிருப்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

5. பூர்வீக சொத்து என்னென்ன சர்வே நெம்பர் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, என் தந்தைக்கு தான் தெரியும். பரசுராம முதலியார் என்பவர் யார் என்றால் என் அப்பாவின் தாத்தாவாகும். பரசுராம முதலியார் பெயரில் வழக்கு சொத்து இருந்தது என காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. சர்வே எண்.78/2 வழக்கு சொத்திற்கு பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.78/2ல் பட்டா எண்.1085க்கு விஸ்தீரணம் 33 சென்ட் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரி தான்.

7. வழக்கு சொத்தில் 2 ஏக்கர் 5 சென்ட் எனக்கு உரிமை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை என் கொள்ளு தாத்தா பரசுராம முதலியார், தாத்தா ரேணு முதலியார் என் தந்தை சேகர் ஆகியோர் அனுபவித்தார்கள் என காண்பிக்க அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. வா.சா.ஆ.3 6ம் வாதி என் தந்தை சேகருக்கு எழுதி வைத்த உயில் என்றால் சரி தான். வா.சா.ஆ.3 உயிலின் அசல் ஆவணம் எங்கே இருக்கிறது என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.3 உயிலில் என் தந்தைக்கு சர்வே எண்.78/2ல் விஸ்தீரணம் 43 சென்ட் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3

உயிலை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. வா.சா.ஆ.4 ஆவணத்தில் வழக்கு சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்த ஒப்புகை சீட்டிற்கு உரிய மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.8 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்த ஒப்புகை சீட்டிற்கு உரிய மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

10. வா.சா.ஆ.9 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்த ஒப்புகை சீட்டிற்கு உரிய மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். சர்வே எண்.78/2க்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் தந்தை கூறி எனக்கு தெரியும்.

11. மேற்படி 1ம் பிரதிவாதி பெயரில் கொடுத்த பட்டா தவறு என கூறி பட்டாவை ரத்து செய்யவேண்டி மனு ஏதேனும் வருவாய் துறை அலுவலரிடம் கொடுத்துள்ளேனா என்றால் என் தந்தை கொடுத்துள்ளார். அம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

12. எனது சத்திய பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் சர்வே எண்.78/2ல் ஏக்கர் 0.26 சென்ட்டை 2ம் பிரதிவாதி அனுபவித்து வருவதாகவும், அதனை மீட்டு வாதிகள் வசம் ஒப்படைக்கவேண்டும் எனவும், பட்டா மாற்றம் செய்யவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான்.

13. என் பாட்டி எழுதி வைத்த உயில்படியும், நானே 2ம் பிரதிவாதி வழக்கு

**சொத்தில் அனுபவிப்பதாக குறிப்பிட்டள்ளதால் வழக்கு சொத்து முழுவதற்கும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**14. 2ம் பிரதிவாதி 1991ஆம் ஆண்டு எவ்வாறு கிரயம் பெற்றாரோ அவரது முன் கிரய தாரர் அனுபவித்ததை போலவே தற்போது வரை அனுபவித்து வருவதால் இவ்வசல் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண்.78/2ல் வாதிகளுக்கு எவ்வளவு உரிமையுள்ளது என சரியான ஆவணங்கள் மூலம் நிரூபிக்காததால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.**

/ஒப்// பி .டி.சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.